<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 80/2020 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | காந்தாமணி | நாள் | 12.12.2024 |
| கணவர் பெயர் | தங்கமணி | | |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

6) என் மூத்த மகன் பெயர் என்னவென்றால், தம்பிதுரை ஆகும். அவர் தற்போது எங்கு வசிக்கிறார் என்றால், நான் வசித்து வரும் வீட்டிற்கு அருகில் வசித்து வருகிறார். கடந்த 2007 ம் வருடம் என் மகன் தம்பிதுரை ஒரு குற்றவழக்கில் தண்டிக்கப்பட்டார் என்றால், சரிதான். பின்னிட்டு மேற்படி வழக்கில் நிரபராதி என விடுதலை ஆகிவிட்டார். என் தாயார் பெயர் என்னவென்றால், ரத்தினம்மாள் ஆகும். அவர் எங்கு வசிக்கிறார் என்றால், தற்போது என் தாயார் உயிருடன் இல்லை. இறந்து 10 வருடங்கள் ஆகிறது.

7) என் தாயார் உயிருடன் இருந்த சமயத்தில் ராமகவுண்டனூரில் உள்ள மாரியம்மன் கோவிலில் நகையை மாற்றிவிட்டார் என ஊர் பஞ்சாயத்து நடைபெற்றது என்றால், சரியல்ல. அவ்வாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை. மேற்படி பிரச்சனை தொடர்பாக எனக்கும், என் கணவருக்கும் அடிக்கடி பிரச்சனை நடக்கும் என்றாலும், அதை 1ம் பிரதிவாதி தான் சமாதானம் பேசி பைசல் செய்வார் என்றாலும், சரியல்ல. எனக்கு கல்யாணம் ஆன சமயத்தில் நான் தானம்பட்டியில் வசித்து வந்தேன் என்றால், சரியல்ல. எனக்கு திருமணம் ஆன சமயத்தில் என் கணவர் கூரை வீட்டில் வசித்ததால், நான் அங்கு வசிக்க முடியாது என கூறி, தானம்பட்டியில் குடிபெயர்தேன் என்றால், சரியல்ல. சுமார் 45 ஆண்டுகளாக மேற்படி கூரை வீட்டில்தான் வசித்து வந்தேன்.

8) நான் தானம்பட்டியில் வசித்து வந்த சமயத்தில் சின்னரசி என்ற நபரை நான் அடித்து, காயப்படுத்தி பிரச்சனை ஏற்பட்டது என்றால், முற்றிலும் தவறானது. அவ்வாறு ஒரு சம்பவமே நடைபெறவில்லை. அதற்கு பின்னிட்டு தான் 1ம் பிரதிவாதியின் அனுமதியோடு மேற்படி கூரை வீட்டில் வசித்தேன் என்றால், சரியல்ல. மேற்படி என் மாமியார் குருவாயிதான் மேற்படி கூரை வீட்டில் வசித்துகொள்ள எனக்கு அனுமதி வழங்கினார் என்றால், சரியல்ல.

9) என் கணவர் திருமணத்திற்கு முன்பு விவசாய கூலி வேலை செய்து வந்தார் என்றால், இல்லை. மில் வேலை செய்து வந்தார். குழந்தை கவுண்டர் என்பவரது தோட்டத்தில் விவசாய கூலி வேலை செய்து வந்தார் என்றால், சரியல்ல. சுமார் 45 ஆண்டுகளாக தாவா சொத்திலுள்ள கூரை வீட்டில் குடியிருந்து வருவதாக சொல்லும் நிலையில், அதற்கான ஆவணங்களை எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறானது என்றாலும், 1ம் பிரதிவாதி எனக்கு ஒண்டிவீரன் கோவில் அருகே குடியிருப்பதற்கு ஒரு இடம் கொடுத்தார்கள் என்றாலும், மேற்படி இடத்திற்கான ரசீதுகளை தான் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், மேற்படி ரசீதுகள் தாவா சொத்திற்கு தொடர்பற்றவை என்றாலும், சரியல்ல.

10) பிரதிவாதிகள் நான் குடியிருப்பதற்கு 0.3 சென்ட் நிலம் மட்டுமே ஒதுக்கி கொடுத்த நிலையில், தற்போது நான் மொத்த சொத்திற்கும் உரிமை கோருகிறேன் என்றால், சரியல்ல. நான் ஒரு சொத்தை சாந்தப்ப செட்டியாரிடமிருந்து வாங்கியதாக சொல்லும் நிலையில், மேற்படி நான் வசித்த பகுதியில் அவ்வாறு சாந்தப்ப செட்டியார் என்ற ஒரு நபரே இல்லை என்றால், சரியல்ல. நான் வசித்து வரும் நிலம், ஒரு காளியப்பன் என்பவருக்கு அனுபவப்படி பாத்தியப்பட்ட நிலம் என்றால், சரியல்ல. மேற்படி நிலத்தை 1969ம் வருடம் 1ம் பிரதிவாதியும், அவரது கணவரும் கிரயம் பெற்று, அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரியல்ல.

11) 1969ம் வருடத்திலிருந்து, தற்போது வரை பிரதிவாதிகள் அரசாங்கத்திற்குரிய தண்டத்தீர்வை மற்றும் கந்தாய வரிகளை செலுத்தி வருகிறார்கள் என்றால், சரியல்ல. மேற்படி பிரதிவாதிகள் தாவா சொத்தை கிரயம் வாங்குவதற்கு முன்பு என் மாமனார் இறந்துவிட்டார் என்றால், சரியல்ல. மேற்படி சமயத்தில் என் கணவர் இளவராக இருந்ததால், அவரை பராமரிக்க என் மாமியார் சிரமப்பட்டார் என்றால், சரியல்ல. அப்போதுதான் என் கணவரை மேற்படி கொழந்தைகவுண்டரின் தோட்டத்தில் கூலி வேலைக்காக என் கணவரை சேர்த்தினார்கள் என்றால், அது குறித்து எனக்கு சரியாக தெரியவில்லை.

12) என் கணவருக்கு திருமணம் செய்ய சொந்த வீடு வேண்டும் என்பதால்தான் ஒண்டிவீரன் கோவில் அருகிலுள்ள நிலத்தில் வீடு கட்டிக்கொள்ள பிரதிவாதிகள் அனுமதியளித்தனர் என்றால், சரியல்ல. பின்புதான் எங்களுக்கு திருமணம் நடந்தது என்றால், மேற்படி நிலம் எங்களுடைய நிலம் ஆகும்.

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.